
# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஜூன் 01, 2024

Weekly E-paper ● June 01, 2024

## மறைந்தும் வாழ்பவர் !

சுப. வீரபாண்டியன்

**திராவிட இயக்க வரலாறே தமிழ்நாட்டின் வரலாறு!**

வெற்றிச்செல்வன்

**ஐன்ஸ்டீன் கடிதம் 1931, காந்தி படம் 1982**

தலையங்கம்

**சமரசமற்ற போர்வாள் தந்தை பெரியாரின் 'விடுதலை'**

திருப்பூர் மகிழவன்

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஜூன் 01, 2024

Weekly E-paper ● June 01, 2024

# மறைந்தும் வாழ்பவர் !



● சுப. வீரபாண்டியன்

வாழ்ந்து மறைவோம்
நாங்கள்!
மறைந்தும் வாழ்பவர்
நீங்கள்!

வைகை ஆற்றின் தண்ணீரில்
பென்னிகுக் முகம்
கண்ணில் தெரியும்
ரேஷன் கடையில்
வாங்கும் பொருள்களில்...
அருந்ததியருக்கும் திறக்கும்
கல்விக் கூடக் கதவுகளில்...
மாற்றுத்திறனாளிகள்
என்னும் பெயரில்...
குடிசை மாற்று வாரிய வீடுகளில்...

பெண்களுக்கான சொத்துரிமையில்
முதுகு வலிக்க
மூட்டை சுமந்தவர்க்கும்
வாரியம் ஒன்றை
வடித்துக் கொடுத்ததில்

செய்து முடித்த
செயல்களில் எல்லாம்
தெரிய வேண்டும்
உங்கள் முகம்தான்

உங்கள் முகத்தின்
உருவம்தானே
அடையாளமாகும்
ஆழ்ந்த நன்றி உடையவர்க்கெல்லாம்!

எத்தனை ஆண்டுகள்
இம்மண் வாழுமோ
அத்தனை ஆண்டுகள்
உம் புகழ் வாழும்!

வாழ்ந்து மறைவோம்
நாங்கள்
மறைந்தும் வாழ்பவர்
நீங்கள்!

# திராவிட இயக்க வரலாறே தமிழ்நாட்டின் வரலாறு!

## வெற்றிச்செல்வன்

தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர். என். ரவி அவர்கள் உதகமண்டலத்தில் கடந்த 28.05.2024 நடைபெற்ற பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் மாநாட்டில் பின்வரும் வாசகங்களைப் பேசியுள்ளார்.

"தமிழ்நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் கட்டமைப்பில் பிரிட்டிஷ் ஆட்சியின் தாக்கம், நமது பாடத்திட்டத்தில் இருந்து முற்றிலும் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது. மாறாக திராவிட இயக்கக் கதைகளால் அப்பாடத்திட்டம் நிரம்பியுள்ளது". மேலும் வைகுண்டரின் அய்யாவழி இயக்கம், வள்ளலாரின் சன்மார்க்க இயக்கம் ஆகிய வரலாறுகளும் தவறவிடப்பட்டுள்ளன என்று பேசியிருக்கிறார்.



அரசியலமைப்பினால் மதிப்பிற்கு உரிய அங்கீகாரம் வழங்கப்பட்ட ஒரு பொறுப்புள்ள பதவியில் இருந்து கொண்டு தனது அறியாமை மொத்தத்தையும் பொதுமேடையில் அம்பலப்படுத்தி வருகிறார் ஆளுநர். மேற்கண்ட செய்தி உண்மையா என்பது குறித்துத் தமிழ்நாட்டில் பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்களிடம் கேட்டால்கூடச் சொல்லி விடுவார்கள்.

சான்றாக, 11ஆம் வகுப்பு, வரலாறு (தொகுதி 2) பாடநூலில், 17வது பாடத்தின் தலைப்பு 'ஆங்கிலேயர் ஆட்சியின் விளைவுகள்'. அப்பாடத்தில் ஆங்கிலேயர் ஆட்சியினால் ஏற்பட்ட விளைவுகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. அதே பாடநூலில் பாடம் 19-இல் 'நவீனத்தை நோக்கி' என்ற தலைப்பில், வள்ளலார், வைகுண்டர் ஆகியவர்களைப் பற்றிய விரிவான வரலாறு தரப்பட்டுள்ளது. இதே போன்ற வரலாறுகளை நாம் மற்ற வகுப்புகளின் பாடநூல்களிலும் காண முடியும். ஆனால் முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல இவற்றை எல்லாம் மறைக்க நினைக்கிறாரே ஆளுநர்? தமிழர்கள் ஒன்றும் தெரியாத அறிவிலிகள் என்று நினைத்துக் கொண்டாரா, தெரியவில்லை.

அதுமட்டுமின்றி, திராவிட இயக்கக் கதைகளால் பாடத்திட்டம் நிரம்பியுள்ளது என்று வயிறு எரிகிறார். இந்திய வரலாற்றுடன் ஒப்பிடும்போது, குறைவான அளவே தமிழக வரலாறு, அதுவும் திராவிட இயக்க வரலாறு, தமிழ்நாட்டுப் பாடநூல்களில் சேர்க்கப்பட்டுள்ளது. உண்மையைச் சொல்லவேண்டுமானால், திராவிட இயக்க வரலாறையும், சாதனைகளையும் இன்னும் கூடுதல் பக்கங்கள் ஒதுக்கி, பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டிய தேவை இருக்கிறது. குறிப்பாக, இந்தி எதிர்ப்புப் போராட்டம் பற்றிய வரலாறு பாடநூல்களில் இடம்பெற வேண்டும். திராவிட இயக்கத் தலைவர்கள் குறித்த பாடங்கள் இடம்பெற வேண்டும். ஆனால் இதற்கே பொறுக்கவில்லை ஆளுநருக்கு. தமிழர் உரிமை மீட்க, திராவிட இயக்கம் நடத்திய போராட்டங்கள் ஆளுநருக்கும், ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களுக்கும் கதைகளாகத்தான் தெரியும். அவை கதைகள் அல்ல, தமிழரின் தன்மானத்தை மீட்டெடுக்க, நூறாண்டு காலம் நடந்த உரிமைப் போரின் களங்கள். திராவிட இயக்க வரலாறே தமிழ்நாட்டின் போராட்ட வரலாறுதான்.

கீழடி அகழாய்வுகளைத் தொடர்ந்து, இந்தியாவின் வரலாறு தெற்கிலிருந்து எழுதப்பட வேண்டும் என்றார் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள். அத்தகைய பணிகள் தொடங்கப்பட வேண்டும். இன்னும் விரிவாக, திராவிட இயக்கத்தைப் பற்றிய வரலாறு மாணவச் செல்வங்களுக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும். அது மட்டுமே ஆளுநரைப் போல நிகழ்காலத்திலேயே வரலாற்றைத் திரிப்பவர்களுக்கு, நாம் புகட்டும் பாடமாக இருக்க முடியும்.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஐன்ஸ்டீன் கடிதம் 1931, காந்தி படம் 1982.

அடுத்த 'கருஞ்சட்டைத் தமிழர்' மின்னிதழ் ஜூன் 4 ஆம் தேதிக்குப் பின்னர் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள வெளிவர இருக்கிறது.

கடந்த 10 ஆண்டுகால சாதனைகளாக மக்களுக்கு என்ன செய்தார் என்று சொல்ல முடியாமல், 'முஜ்ரா'

ஆபாச நடனம்வரை பேசி எதிர்கட்சிகளை இழிவுபடுத்த எவ்வளவோ முயன்றும், அது பயனற்றுப்போக தோல்வி பயத்துடன் கன்னியாகுமரிக்கு வந்து செல்கிறார் விஷ்ணுவின் 11ஆம் 'பரமபிதா' அவதாரமான மோடி, தியானம் செய்வதற்காக.

பிரச்சாரம் முடிந்து அடுத்த 48 மணிநேரம் தேர்தல் நடத்தை விதியின்படி அமைதியாக இருக்கவேண்டும். ஆனால் தேர்தல் ஆணையம்தான் அமைதியாக இருக்கிறது.

இது ஒரு கூத்து என்றால், திடீரென்று, காந்தி பற்றிப் பேசுகிறார் அந்த பிரம்மபுத்திரர்.

"காந்தி என்ற படம் வெளிவந்த பிறகுதான் காந்தியை தெரிந்துகொண்டார்கள் பிறர்" என்று பேசியிருக்கிறார் மோடி.

ரிச்சர்ட் அட்டன்பரோவின் 'காந்தி' திரைப்படம் டில்லியில் 1982 நவம்பர் 30, இங்கிலாந்தில் டிசம்பர் 3 ஆகிய தேதிகளில் வெளியிடப்பட்டது.

அதற்கு முன்னரே 1879ஆம் ஆண்டில் ஜெர்மனியில் பிறந்து இயற்பியலுக்கான நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானியான ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் 1931 ஆம் ஆண்டிலேயே காந்திக்கு ஒரு கடிதம் எழுதி அவரை நேரில் சந்திக்க வேண்டும் என்ற தன் விருப்பத்தைத் தெரிவித்தார்.

காந்தியாரும் ஐன்ஸ்டீனுக்குப் பதில் எழுதினார் என்ற வரலாறு தெரியுமா இந்தக் கடவுள் அவதாரத்திற்கு?

20,000 புத்தகங்கள் படித்த அந்த மகானுபாவராவது இதைச் சொல்லி இருக்கலாம் மோடிக்கு.

இன்று கிராமங்களில் வயதான பாமர மக்கள் கூட காந்தியைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

ஆனால் சென்னை போன்ற பெறுநகர்ப் புறங்களில் கூட ஆர்.எஸ்.எஸ் இன் பிதாமகர்தளான கோல்வால்கர், சாவர்கரைப் பெரும்பாலான படித்தவர்களுக்குத் தெரியவில்லை என்பது கூட பிரம்மாவால் அனுப்பப்பட்ட அந்த மோடிக்குத் தெரியவில்லையே!

விவேகாநந்தர் இந்துமதம் குறித்துப் பேசினார். மோடி இந்துத்வா என்ற மதவெறியைப் பேசுகிறார்.

விவேகாநந்தரைப் பற்றித் தெரியாமல் தியானம் செய்வதும், வரலாறைப் படிக்காமல் காந்தியாரைப் பற்றிப் பேசுவதும் வடிவேலுவின் 'காமடி' யாக அல்லவா இருக்கிறது!

மக்கள் கலைஞர் பிரகாஷ்ராஜ் சொல்வது போல "அவர் ஒரு டெஸ்ட்டியூப் பேபி"

●

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமாராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் குறித்துத் தலைமை நீதிபதிக்குத் தலைவர் சுப.வீரபாண்டியன் கடிதம்!

ஆரியத்தால் வீழ்ந்தோம்! திராவிடத்தால் எழுந்தோம்

**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

(Tamils' Organisation of Dravidian Movement)

120, NTR Street, Kodambakkam, Chennai - 600 024. Phone: 044-2472 6408.

**சுப.வீரபாண்டியன்**
தலைவர்

**SUBA. VEERAPANDIYAN**
President

Date: 27.05.2024

To,
**THE HONORABLE CHIEF JUSTICE OF INDIA,**
Supreme Court of India,
Tilak Marg,
New Delhi - 110001.

Honourable Sir,

**Sub: Complaint sequel to the discharge of constitutional duties and functioning of Justice G.R.Swaminathan of Madras High court.**

**Ref: Orders passed in W.P(.MD) 10496/2024 on 17.05.2024 at the Madurai Bench of Madras High court.**

Justice G.R.Swaminathan being a High Court Judge passing judgments by using his constitutional authority which is not complying with the Judicial principles and constitutional objects.

One such case is referred below.

The Division Bench comprising Hon'ble Justices S.Manikkumar and S.Velumani pronounced verdict on the writ field by one Mr. Dalit Pandiyan by judgment dated 28.04.2015 in W.P.(MD) 7068/2015 and banned the practice of devotees made to roll on the left over banana leaves after eating food by others on it since it is against the human dignity, public health and civilised society. At this juncture it is worthwhile to bring to your notice that the Apex Court had already passed judgment in Special Leave Petition (C) 33137/2014 in the case of State of Karnataka vs

Adivasi Budhakattu Hitarashana Vedike, Karanataka and Others whereof condemned the attitude of degenerate the process of developement towards scientific attitude and held that "Urulu Sev" like roling man on the leaves left by Brahmins is not acceptable in the light of principles of constitution of India. Such being the judicial dictum, Justice G.R.Swaminathan overruled the above judgments and restored the above mentioned the uncivilised practice of rolling on the leftover banana leaves after eating food by others on it against the judgements of Supreme court and progressive social step forward.

Justice G.R.Swaminathan being a Single Judge has over ruled the Judgements of Division Bench and Supreme Court on the same subject matter which was already decided to maintain social order.

...nity (Refer Para No 27, 28 & 34). Constitutional court like High Court should not have taken a view that human rolling on leaves left after eating food in the name of religious practice is a fundamental right. The stand of G.R.Swaminathan J is contrary to the true spirit of the principles of the constitution and against the basic sturcture of Indian constitution.

Our constitution starts with preamble by saying that We the people of India having solemnly resolved to "constitute India" which means constitution framers thought fit to create/establish a nation of scientific temper, sovereign, socialist, secular and democratic republic. But the judgment passed by GRSJ de-promote the values of basic structure.

It is not appropriate to Justice G.R.Swaminathan to continue as a High Court Judge especially at Madras High Court.

So, I request your good office that your Lordship may be pleased to order for detailed enquiry on the attentive circumstances of the controversial Judgements which are generally passed without giving opportunity for the filing of counter statements by opposite parties that too in a day or two with undue haste. Your immediate action would ensure the benefit of preventing large scale miscarriage of Justice by G.R.Swaminathan J.

Your's Sincerely

**SUBA. VEERAPANDIYAN**

# சமரசமற்ற போர்வாள் தந்தை பெரியாரின் 'விடுதலை'

**திருப்பூர் மகிழவன், திராவிடர் விடுதலைக் கழகம்**

திராவிட இயக்கம் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்து இன்று வரை நூற்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வெளியாகி இருக்கின்றன. அவற்றில் இன்றைக்கு 90 ஆவது அகவையைக் காணும் 'விடுதலை', 01/06/1935 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இன்று வரை தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்து முத்திரை பதித்திருக்கிறது .

ஆட்சியின் தலைமைப் பொறுப்பில் யார் இருந்தாலும் பார்ப்பனர்களின் கொட்டம் அளவு மீறிக் கொண்டிருந்த நேரத்தில், அவர்களின் தலையில் தட்டி மூலையில் உட்காரச் செய்யும் வகையில் அன்றைக்கு இரகசிய குறிப்பேடு முறையைக் கண்டித்து எழுதிய ஒரே ஒரு பத்திரிக்கை 'விடுதலை' மட்டும் தான். தலைவர் கலைஞர் இரகசிய குறிப்பேடு முறைக்கு முடிவுரை எழுதினார். இன்றைக்கும் ஆளும் ஆட்சியாளர்கள் விடுதலையில் என்ன அறிக்கை வந்து இருக்கிறது என்று கூர்ந்து கவனிக்கும் வகையில் விடுதலை திகழ்ந்து கொண்டு இருக்கிறது.

*உலகின் ஒரே பகுத்தறிவு தமிழ் நாளேடு.The World's Only Tamil Rationalist Daily.*

விடுதலை நாளிதழில் 26 ஆவது அகவை தொடக்கத்தில் தந்தை பெரியார் அவர்கள் விடுதலையைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, "ஒழுக்கக் கேடானதும் மூட நம்பிக்கைகளை வளர்க்கக் கூடியதும் தமிழ் மக்களுக்கு சமுதாயத்திலும், அரசியலிலும், உத்தியோகத் துறையிலும் கேடளிக்ககூடியதுமான காரியங்களை வெளியாக்கி - அக்கேடுகளைப் போக்குவதற்காகப் பாடுபடும் பத்திரிக்கை 'விடுதலை'. விடுதலை ஒன்றே ஆக இருப்பதால் அத்துறைகளில் அது செய்து வந்த பணி நல்ல அளவுக்கு பயன்பட்டு வந்திருப்பதோடு விடுதலை பத்திரிக்கை இல்லாதிருந்தால் மேற்கண்ட துறைகளில் ஏற்படும் கேடுகளை ஏன்? என்று கேட்க நாதியே இல்லாமல் போயிருக்கும்.

முதலாவது விடுதலையில் வரும் செய்திகளை நமது தமிழ்நாடு அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகளும் நல்லவண்ணம் கவனித்து ஒரு அளவுக்காவது பரிகாரம் செய்து வந்திருப்பதுடன் கவனம் செலுத்தும்படியான நிலையும் ஏற்பட்டு வந்திருக்கிறது" என்கிறார்.

அவர் கூறியதைப் போல எந்தவிதமான சமரசமும் இன்றி வருங்கால தலைமுறையின் நலனை மட்டும் மையமாகக் கொண்டு மலிவான விளம்பரங்களையும் செய்திகளையும் தவிர்த்து பார்ப்பனரல்லாத மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வண்ணம் மூட நம்பிக்கை ஒழிப்பு, பகுத்தறிவு, அறிவியல் ,உலக செய்திகள் , பெண்ணுரிமை, அரசியல் நிகழ்வுகள், வேலைவாய்ப்பு மற்றும் பொது அறிவுச் செய்திகள் என மக்கள் வாழ்வியலுக்குத் தேவைப்படும் அனைத்தையும் ஒருங்கே திரட்டி அவர்கள் கைகளில் தரக்கூடிய ஏடாக விடுதலை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த விஞ்ஞான யுகத்தில் 21ஆவது நூற்றாண்டில் பார்ப்பனப் பத்திரிகைகளும்,பார்ப்பன அடிவருடி பத்திரிகைகளும், ஆர்.எஸ்.எஸ்- பிஜேபி வகையறாக்களும் திட்டமிட்டு வரலாற்றைத் திரித்தும், திராவிட இயக்கத்திற்கு எதிராகவும், திராவிட ஆட்சிக்கு எதிராகவும், அறிவியல் உண்மைகளுக்கு மாறாகவும் தொடர்ந்து அவதூறுகளை, காழ்ப்புணர்ச்சிக் கருத்துகளை அள்ளி வீசிக்கொண்டு இருக்கக்கூடிய இந்த சூழலில் அவர்களுக்கு சரியான தரவுகளுடன் கூடிய பதிலடியை தரக்கூடிய நாளிதழாக விடுதலை தொடர்கிறது.

விடுதலை பணிமனையைத் திறந்து வைத்த மறைந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார், "தமிழன் இல்லம் என்பதற்கு அடையாளம் அங்கே விடுதலை இருக்க வேண்டும்" என்று கூறியதைப் போல ஒரு இயக்கத்தின் இதழாக மட்டும் இல்லாமல் எல்லாத் தரப்பு மக்களும் வரவேற்கக் கூடிய வகையில் ஒரு இனத்தின் வரலாற்றைக் கூறும் களஞ்சியமாக விடுதலை வெற்றி நடை போட்டுக்கொண்டு இருக்கிறது.